# ஆய்வுச்சுடர்

**(பன்னாட்டு பன்முகத்தமிழ் அரையாண்டு மின்-ஆய்விதழ்)**

**அய்யநாடார் ஜானகிஅம்மாள் கல்லூரி**

(தன்னாட்சி, மதுரை காமராசர் பல்கலைக்கழக இணைவு பெற்றது, தேசியத்தர
மூன்றாம் மறுமதிப்பீட்டில் 'A' தகுதி (4க்கு 3.67 தரப் புள்ளிகள்), திறன்மிகு கல்லூரி,
புதுதில்லி இந்திய அரசு உயிரித் தொழில்நுட்பத்துறையின் நட்சத்திரத் தகுதி
மற்றும் தேசியத்தர வரிசைப் பட்டியலில் (NIRF 2019) 51ஆம் இடம் பெற்றது)

**சிவகாசி - 626124, தமிழ்நாடு, இந்தியா.**

**புரவலர்**
**திரு. கி. அபிரூபன்,** M.B.A.,
தாளாளர்

**துணைத்தலைவர்**
**முனைவர் க. சிவனேசன்**
தமிழ்த்துறைத்தலைவர்

**தலைவர்**
**முனைவர் செ. அசோக்,** B.Sc.,M.P.Ed.,M.Phil.,D.Y.Ed.,Ph.D.
முதல்வர்

**பதிப்பாசிரியர்**
**முனைவர் ந. அருள்மொழி**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை

## சுடரின் முழக்கம்

உலகமே 'கொரோனா' அச்சத்தால் கலங்கியிருக்கும் சூழல்; மக்கள் இயக்கம் வீட்டிற்குள் முடங்கிப் போன சூழல்; தொழில்நுட்ப வளர்ச்சியால் காலம் தந்த தொடர்புக் கருவிகளால் உறவுகளோடும் சமூகத்தோடும் உறவாடும் சூழல்; "குட்டி ஜப்பான்" எனப் புகழ்பெறும் சிவகாசியில் அறிவுக் கோயிலாய்த் திகழும் எம் கல்லூரியும் உலகத்தோடு இயைந்து அறிவுசார் பணிகளில் இயங்கி வருவது மகிழ்ச்சியை விதைக்கின்றது.

திரு. ப.அய்யநாடார் அவர்களின் புதல்வர் பெருமக்களாம் திரு. அ.கிரகதுரை, அரிமா திரு. அ.வைரப்பிரகாசம், திரு. அ.சுபாஷ் சந்திரபோஸ் (உறுப்பினர், அஞ்சாக்கல்லூரி ஆட்சிக்குழு), திரு. அ.இராமமூர்த்தி, B.Com., (தலைவர், அஞ்சாக்கல்லூரி ஆட்சிக்குழு), ஆகியோரின் ஆளுமைத் திறனால் கல்லூரி கண்ட ஆக்கச் செயல்பாடுகளுக்குக் கரம் கூப்புகின்றோம். எம் கல்லூரியின் வளர்ச்சியில் நாள்தோறும் வினையாற்றும் திரு வை.அய்யன் கோடீஸ்வரன், B.Tech., (செயலர், அஞ்சாக்கல்லூரி ஆட்சிக்குழு), திரு. கி.அதிபதி, M.B.A., (உறுப்பினர், அஞ்சாக்கல்லூரி ஆட்சிக்குழு), திரு. கி.அபிரூபன், M.B.A.,(தாளாளர், அஞ்சாக் கல்லூரி ஆட்சிக்குழு), ஆகியோரை நினைந்து போற்றுகின்றோம். கல்லூரியைக் கணினியுகத்திற்கேற்ற இணையப் பயன்பாட்டோடு அழைத்துச் செல்லும் கல்லூரி முதல்வர் முனைவர் செ.அசோக் அவர்களுக்கு நெஞ்சம்நிறை நன்றி! தமிழ்த்துறையின் பணிச்செம்மைக்கு ஊக்கம் தந்து வழிநடத்தும் தமிழ்த்துறை மற்றும் தமிழாய்வு மையத் தலைவர் முனைவர் க.சிவனேசன் அவர்களுக்கு மகிழ்ச்சி நிறை நன்றி!

ஆய்வுக் கட்டுரைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து உதவிய கல்லூரி முதுநிலை ஆங்கிலத் துறைத் தலைவர் திருமதி கல்யாண சுந்தரி அவர்களுக்கு நன்றி! கட்டுரைக் கருத்தினைச் சித்திரிக்கும் வண்ண அட்டைகளை கணினி உதவியோடு உருவாக்கித் தரும் காட்சித்தொடர்பியல்துறை உதவிப்பேராசிரியர் பா.வெங்கடேஷ் அவர்களுக்கு புன்னகை நிறை நன்றி! வெளித்தெரியாது இவ் இதழ் பணிக்கு பல்லாற்றானும் உழைத்திட்ட நல்உள்ளம் நிறைந்த வேர்களுக்கு என்றென்றும் நன்றி!

இலங்கையில் மகிழ்ச்சிக்காகவும் சமூக ஒருமைப்பாட்டிற்காகவும் ஆரோக்கியமான உறவு நிலைக்காகவும் அறுவடை முடிந்த பின்னர் இன்பத்திற்காகவும் ஆடப்பெறும் நாட்டார் கலைவடிவம் வசந்தன் கூத்து குறித்த கட்டுரை - திருமூலரைக் குறித்த செய்திகளைப் பல்வேறு தரவுகளின் வாயிலாக நிறுவ முயலும் ஆய்வுக் கட்டுரை - சங்கத் திணைஇலக்கியப் பின்புலத்தைக் கோட்பாடாக்கித் தந்துள்ள சங்க ஆய்வுக்கட்டுரை - சங்க காலத்தில் வாழ்ந்த வண்ணக்கன் புலவர்களைக் குறித்த ஆய்வுத் தேடல் நிறைந்த கட்டுரை - புலம்பெயர் தமிழர்களால் மொரீசியஸ் தீவில் கிரியோல் மொழியில் மொழிபெயர்க்கப் பெற்றுள்ள திருக்குறளின் மொழிபெயர்ப்புச் சூழலையும் தன்மையையும் விளக்கி நிற்கும் கட்டுரை என ஆய்வுச்சுடர் ஒளி வீசி நிற்கின்றது. .

ஆய்வாளர்கள் தமிழின் வளம் நிறைந்த பல்வேறு தளங்களுக்குள் புகுந்து எச்செய்தியைப் புலப்படுத்தி எழுத முற்படினும் ஆய்வு வளமை விரிந்து கொண்டே செல்லும். ஆய்வு வளமைமிகு ஆய்வாளர்களின் அறிவிற்குக் கலங்கரை விளக்காய் ஆய்வுச்சுடரும் துணை நிற்கும் என்பது திண்ணம்.

**ந. அருள்மொழி**
பதிப்பாசிரியர்